ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2004/54 - 2017 පෙබරවාරි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.02.02

2004/54 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: உது 2/5/2/56.

காணி அமைச்சின் இலக்கம்: 13/97/FR/151.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில், கரபகேடிய கிராம அலுவலர் பிரிவில் வின்ச்பீல்ட்பார்க் தோட்டம் என்று அழைக்கப்படும் காணியை நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. மஹ 6627 கொண்ட 1, 2, 3, 4, 6, 7, 9, 10 என்பவற்றால் விபரிக்கப்பட்டுள்ள 7.5025 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணி.

உரிமை கோருபவர் : திருமதி. டீ. ஜீ. பொடிமெணிகே, இல. 46, கோனவல, இரஜவெல்ல

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, உடதும்பர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சுஜானீ ஆர். விஜேதுங்க,
பிரதேச செயலாளர்,
உடதும்பர.

பிரதேச செயலகம்,
உடதும்பர,
2017, சனவரி 18.

2-693

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.